தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 278 – இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆட்களைப் பதிவு செய்யும் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பயன்படு நிலையில் காணப்பட்ட ரூபா 343,815,632 தொகை பெறுமதியான மாவட்ட செயலகக் கட்டிடம் சொத்தொன்றென கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்படாமல் நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அலுவலகக் கட்டிடத்தை மூலதனப்படுத்துவதற்கு கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடத்தை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) வருமானங்கள் பெறுவனவு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் பண்ட ஏல விற்பனை ஒன்றின் மூலம் கிடைத்திருந்த ரூபா 581,655 இற்கான வருமானம் ரூபா 374,000 தொகை என காசுப்பாய்ச்சல் கூற்றில் மூதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சல் என	சில பிரதேச செயலகங்களில் ஏலவிற்பனை வருமானங்கள் வருமானத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் அரச வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதனால் இந்த வித்தியாசம்	ஏலவிற்பனை வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

ரூபா 207,655 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்பட்டிருந்தமையால் சரியாக கணக்கீடு செய்யும் படி பிரதேச செயலகங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கப்பட்டிருந்தது.	

(இ) மீண்டுவரும் செலவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திறைச்சேரி கணினி அச்சுப் பதிவின் படி 04 செலவு விடயங்களுக்கான ஏற்பாடுகளில் சேமிப்பு திணைக்கள வாக்குப்படி பேரேட்டுடன் இணக்கம் செய்த போது ரூபா 1,165,797 இற்கான இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது.	செலவுத் தலைப்பு 130 இன் கீழ் காணப்பட்ட மாவட்ட திட்டமிடல் பிரிவு 2024 ஆண்டு முதல் 278 செலவுத் தலைப்பின் கீழ் உட்படுத்தப்பட்டிருந்தமையால் திறைச்சேரி கணினிப் பதிவின் படி மற்றும் திணைக்கள வாக்குப்படி பேரேட்டிற்கு இடையே வித்தியாசம் ஒன்று ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது.	திறைசேரி அச்சுப் பதிவு மற்றும் திணைக்கள வாக்குப்படி பேரேட்டுடன் இணக்கம் செய்து சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ) வைப்புக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாவட்ட செயலகம் மற்றும் 18 பிரதேச செயலகங்களின் மீளாய்வாண்டின் இறுதி நிதி நிலைமைக் கூற்றின் வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 257,940,243 தொகை எனினும், தலைப்பு 278 இற்குரிய நிதி நிலைமைக் கூற்றின் வைப்புக் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 257,739,304 தொகையாக காணப்பட்டமையால், ரூபா 200,939 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	பொது வைப்புக் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 200,940 இற்கான மீதியின் வித்தியாசத்திற்கான பிழையினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறைப் பிரகாரம இணக்கம் செய்து மீதியில் காணப்படுகின்ற தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(உ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும்	சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் (UPD) காணப்படுகின்ற எனினும், காணப்படாத நிலையான சொத்துக்களின் மீதிகளை அகற்றி தவறினை	பிழையினை சரி செய்வதற்கான சான்றுகளுடன் நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	உபகரணங்களின் பெறுமதி ரூபா 10,101,641,809 இற்கான இணக்கமின்மை, மீளாய்வாண்டின் போது திறைசேரியினால் சீராக்கல் செய்திருந்த போதிலும் அதற்காக போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சரி செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டிருந்தது.	
(ii)	மாவட்ட செயலகத்திற்குரிய 06 காணி, கட்டிடங்கள் மற்றும் வாகன விடயங்களுக்குரிய ரூபா 443,015,424 இற்கான மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய மூலதனப்படுத்தப்பட்ட கிரயப் பெறுமதி அல்லது பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அடங்கிய மூல ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய மூல ஆவணங்கள் எதிர் காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.	மூலதனப்படுத்தப்பட்ட பெறுமதிக்குரிய கணக்காய்வினால் வேண்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள்;

(அ) முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது எனவும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்ததென நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது தலைப்பு 278 இற்கான திட்டத்தின் படி வேண்டப்பட்ட கட்டுநிதித் தொகையை விட வேண்டப்பட்ட கட்டுநிதி ரூபா 2,047,269 மில்லியன் குறைந்த பெறுமதியொன்றை கொண்டிருந்தது.	சந்தை சிக்கல்கள் காரணமாக செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனதால், திட்டமிடப்பட்ட கட்டுநிதி மற்றும் வேண்டப்பட்ட கட்டுநிதியிடையே வித்தியாசங்கள் ஏற்பட்டது. அதேபோல், வைப்புக் கணக்குகள் மற்றும் முற்பணக் கணக்குகளுக்காக கட்டுநிதி வேண்டப்பட்ட போதிலும், அதற்காக வேண்டப்பட்டவாறு கட்டுநிதி கிடைக்காமையால் இந்த வித்தியாசம் ஏற்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.	கட்டுநிதித் தேவைப்பாடுகள் திட்டமிடும் போது பௌதீக நிலைமைகளையும் கவனத்தில் எடுத்து முடிந்தளவு சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

3.2 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது 13 செலவு விடயங்களின் ஏற்பாடுகளில் சேமிப்பு 22 சதவீதம் - 70 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.	தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 கொண்ட செலவுகளை மிகவும் சிக்கனத் தன்மையுடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் செலவுகள் குறைவடைவதால், சேமிப்பு மற்றும் பில்பத்திரங்கள் குறிப்பிட்ட நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படாமை ஆகிய காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.	நிதிப் பிரமாணம் 50(11) இன் படி மதிப்பீடுகள் முடிந்தளவு சரியானதாகவும், முழுமையானதாகவும் தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பிரதேச அபிவிருத்திக்கு முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும்.

3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
07 பிரதேச செயலகங்களுக்கு, 48 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் 94 தேவைப்பாடுகளுக்காக வழங்கியிருந்த ரூபா 946.9 மில்லியனிற்கான ஏற்பாடுகளில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 151.5 மில்லியன் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்புக்கள் மொத்த ஏற்பாடுகளில் 05 சதவீதம் 100 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது.	செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமை, போதியளவு கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமை, உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரல் ஆகிய காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. சேமிக்கப்பட்ட ஏற்பாடுகளை சாட்டுதல் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன்.	தொடர்புடைய வரிசையமைச்சு / திணைக்களங்கள் மற்றும் திறைசேரியுடன் ஆண்டின் முதலாவது அரையாண்டு முதல் தொடர்ச்சியாக தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்து செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை உச்சமட்டத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	அவதானிப்பு			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமைகள்		
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571	2,604,482	மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் 02 வருடங்களை மிகைத்துள்ள 27 வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காலம் கடந்துள்ள வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறைப் பிரகாரம் செயற்பட்டு காலம் கடந்துள்ள பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் படி செயற்பட வேண்டும்.
(ஆ)	பொது நிருவாக சுற்றறிக்கைகள்				
(i)	2008 பெப்பரவரி 06 திகதிய 05/2008 இலக்கம் கொண்ட சுற்றிக்கையின் வழிகாட்டல் 1.4		03 பிரதேச செயலங்களினால் பிரஜைகள் சாசனத்தின் தேவைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.	பிரஜைகள் சேவை சாசனம் நாளதுவரை ஆக்கப்பட்டு வருவதுடன், எதிர் காலத்தல் பலகை தயாரிக்கப்ப்டு காட்சப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	பிரஜைகள் சாசனசனத்தின் சேவைகள் நாளதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட சுற்றிக்கையின் பிரிவு 3.1		மாவட்ட செயலகத்தின் மற்றும் 08 பிரதேச செயலகங்களின் 21 வாகனங்களுக்காக 2024 ஆண்டின் போது எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	வாகனங்களுக்காக எரிபொருள் எரிவுப் பரிசோதனை எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	எரிபொருளின் செயற்திறனை இனங்காண்பதற்காக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iii)	2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை		02 பிரதேச செயலகங்களின் மூலம் மனித வள அபிவிருத்தித் திட்டமொன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் 15 திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மனிதவளத் திட்டம் தயாரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர் காலத்தில் இவ்வாறான தாமதங்ள் ஏற்படாமல் இருப்பதற்க பொறுப்பாக இருப்பனே் என குறிப்பிடப்பட்டிருந்தது.	2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும்.

3.5 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப் பிரமாணம் 135 இன் கீழ் 2024 ஆண்டில் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாடு தொடர்பாக அதிகாரங்கள் சாட்டப்படுவதன் பிரகாரம் ரூபா 500,000 தொகையை விட கூடிய வாகனத் திருத்த வேலைகள் தொடர்பாக அமைச்சசுச் செயலாளரின் பூர்வாங்க எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், உறுதிச் சீட்டிலக்கம் 347 இன் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 908,750 இற்கான திருத்த வேலைக்காக நிதிப் பிரமாணம் 137 இன் படி அங்கீகரிக்கும் போது அதிகாரமொன்று காணப்படாத மற்றும் திருத்த வேலை தொடர்பாக மோட்டார் வாகன பரிசோதகரின் பரிந்துரையின்றி கொடுப்பனவிற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2025 ஏப்ரல் 03 திகதி அளவில் மேற்கூறிய தொகை மீண்டும் பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	05/2022 சுற்றறிக்கையின் படி திருத்த வேலை பிரதேச கராஜொன்றின் மூலம் மேற்கொள்ளும் போது அமைச்சுச் செயலாளரின் பூர்வாங்க அங்கீகாரம் தேவையில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	வாகன திருத்த வேலைகளின் போது நிதி அதிகாரமளிப்பு வரையறையினுள் செயற்பட வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.6 மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலக வட்டாரத்தில் பனகடுவ பிரிவில் கணியம் அகழ்விற்காக 94.6174 ஹெக்டயரிற்கான நிலப் பரப்பொன்று தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்படும் போது அமைச்சரவை தீர்மானத்தின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை, தொல்பொருள் பெறுமதியுடைய இடங்கள் காணப்படும் போது இனங்காணாமல் மற்றும் குத்தகை	சிக்கல் தன்மையை தீர்த்துக்கொள்ளல் தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்திடம் அறிவுரை பெற்றுக்கொள்வதற்காக கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக வழங்கப்படுகின்ற அறிவுரையின் படி நடவடிக்கை எடுத்து சிக்கல் தன்மையுள்ள இடங்களை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என	முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவை தீர்மானத்திற்க முரணாக செயற்படல் உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உடன்படிக்கையொன்றுக்கு அணுகாமல் வருடாந்த குத்தகை ரூபா 6,504,000 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டு 2022 செப்தம்பர் 12 திகதி அனுபவிப்பதற்காக வழங்குவதற்க எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.	அறிவிக்கப்பட்டிருந்தது.	

3.7 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உத்தியோத்தர் ஒருவர் இறந்து 03 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையான காலங்கள் கடந்திருந்த போதிலும், இடமாற்றம் பெற்று 05 மாதங்கள் கடந்திருந்த போதிலும், சேவையை இடைநிறுத்தி இறுதித் தவணை அறவீடு செய்து 06 மாதங்கள் முதல் 12 வருடங்கள் வரையான எதுவித தவணைப் பணமும் அறவிடப்பட்டிருக்காத மற்றும் ஓய்வு பெற்று 03 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை காலங் கடந்திருந்திருந்த 20 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,937,013 இற்கான கடன் மீதிகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஓய்வு பெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ஓய்வூதியத் திணைக்களத்திற்குரிய ஏற்பாடுகளில் இருந்து எதிர் காலத்தில் அறவீடு செய்யப்படும் எனவும், சேவையை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தொடர்பாக நினைவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமையால், எதிர் காலத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிலுவைக் கடன் கால ரீதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் நிலுவை கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யபடாமல் கைவிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 22,764,925 இற்கான 28 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிந்தது.	நிலவிய சீரற்ற காலநிலை, புவிச்சரிதவியல் விசாரணை அறிக்கைகள் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஆகிய காரணங்களினால் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியவில்லை.	கிடைத்திருந்த ஏற்பாடுகளை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படாமை தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அங்கீகாரிக்கப்பட்ட செயற்திட்டங்களை குறிப்பிட்ட காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியுமான விதத்தில் முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ)	கிராமத்துடன் அளவளாவுதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2023 ஆண்டின் போது எம்பிலிப்பிடிய பிரதேச செயலகத்தின் மூலம் சேவை இல்லம் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,199,947 இற்கான ஏற்பாட்டுத் தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 333,648 இற்கான வேலைகள் நிறைவேற்றப்பட்டு செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது.	இந்தக் காலப் பகுதியில் நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையின் காரணமாக எரிபொருள் மற்றும் சீமெந்து பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணத்தினால் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. அடுத்த அபிவிருத்திச் செயற்திட்டம் பெற்றுக்கொள்ளும் போது இதற்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	- மேற்படி -

4.2 செயற்திட்டங்களை நிறைவேற்றவதில் தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	07 பிரதேச செயலகங்களில் 39 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக காணிகள் தனதாக்கும் செய்முறை 1980 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை இடைப்பட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும், தனதாக்குவதற்குரிய அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	காணி அமைச்சரின் பரிந்துரை தாமதமடைத்தல், நில அளவை அலுவல்கள் தாமதமைடதல், நீதிமன்ற அலுவல்கள் காணப்படல் ஆகிய காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது.	தாமதத்திற்கான தாக்கத்தை ஏற்படுத்திய விடயங்களை மீளாய்வு செய்து காணிகளை தனதாக்கும் அலுவல்கள் விரைவுபடுத்தும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு உத்தேச செயற்திட்டங்களை விரைவாக செயற்படுத்த வேண்டும்.
(ஆ)	இரத்தினபுரி மாவட்டத்தில் 2017 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையான காலப் பகுதியில் வெள்ளத்தினால் மற்றும் மண் சரிவினால் சேதமடைந்த மொத்த வீடுகளின் எண்ணிக்கை 26,572 தொகை காணப்பட்டதுடன், வழங்கப்பட வேண்டிய மொத்த நட்டஈட்டுத் தொகை ரூபா 1,106,840,660 தொகை எனினும் 2024 திசெம்பர் 31 திகதி அளவில் அவற்றில் மேலும் செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகை ரூபா 762,317,467 தொகையாக காணப்பட்டது.	செலுத்தப்பட்டிருக்காத நட்டஈட்டுத் தொகைக்காக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த பிரதான காரணம் ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை என அறிவிக்கப்பட்டிருந்தது.	ஓட்டுமொத்த செய்முறையையும் மீளாய்வு செய்து முறைப் பிரகாரம் ஏற்பாடுகள் விண்ணப்பித்து நட்டஈடு வழங்கும் செய்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	வெள்ளம், மண் சரிவு காரணத்தினால் சேதமடைந்த வீடுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 83,990,000 இற்கான நட்டஈட்டுத் தொகை 08 பிரதேச செயலகங்களின் 104 நலன் பெறுவோர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த வீடுகள் பாதியளவு பூர்த்தி செய்யப்பட்ட நிலைமையில் காணப்பட்டதுடன், நலன் பெறும் குடும்பங்கள் கடின ஆபத்துடனான இடங்களில் அல்லது வேறு தற்காலிக இடங்களில் குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.	நலன் பெறுவோருக்குரிய வீடுகள் நிர்மணிக்கும் அலுவல்களை விரைவுபடுத்தி நலன் பெறுவோரை குடியிருத்துவதற்கும் மற்றும் பழைய வீடுகளை உடைத்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், தொடர்ந்தும் நிர்மாணிக்கப்பட்டிருக்காத நலன் பெறுவோருக்கு எதிராக சட்ட செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	வீடுகள் நிர்மாணிக்கும் அலுவல்கள் தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணித்து, பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலன் பெறும் குடும்பங்களை விரைவாக குடியிருத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.
(ஈ)	03 பிரதேச செயலகங்களின் 10 நலன் பெறும் குடும்பங்களுக்கு மண் சரிவு ஆபத்து காரணமாக மீள்குடியேற்றத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 2,800,000 தொகையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், எதுவித பௌதீக முன்னேற்றமும் அவதானிக்கப்படவில்லை.	நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், நிர்மாண வேலை மேற்கொள்ளல் அல்லது அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டங்களை கண்காணித்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் மீள்குடியேற்ற அலுவல்கள் தொடர்பாக தொடர்ச்சியான கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	தேசிய கட்டிட ஆய்வு அமைப்பு மற்றும் அனர்த்த உதவிச் சேவை நிலையத்தின் மூலம் மீள் குடியேற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது நிர்மாண வேலை வழிகாட்டல்களின் கட்டம் 08 இன் படி அனர்த்த கிராமங்களுக்காக உட்கட்டமைப்பாகிய நீர், மின்சாரம் மற்றும் நுழைபாதைகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், 02 பிரதேச செயலகங்களின் அனர்த்த கிராமங்களுக்காக நீர் வசதிகள், 01 பிரதேச செயலகத்தின் அனர்த்த கிராமங்களுக்காக மின்சார வசதிகள் மற்றும் 02 பிரதேச செயலங்களின் அனர்த்த கிராமங்களுக்காக நுழைபாதை வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவது தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறைப் பிரகாரம் செயற்திட்டங்கள் திட்டமிடப்படாமை தொடர்பாக, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நிர்மாண வேலை வழிகாட்டலுக்கு இணங்க குறிப்பிட்ட வசதிகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	14 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சுமார் 183 காணிகள் பல்வேறு அரச நிறுவனங்களினால் உரித்தாக்குதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் குறிப்பிட்ட விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணிகளை உரித்தாக்குவதற்காக விண்ணப்பித்திருந்த கால வரையறை 1997 – 2021 ஆண்டு வரை என காணப்பட்டதென மேலும் அவதானிக்கப்பட்டது.	காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்தல், சட்ட அலுவல்கள் உரிய நிறுவனங்களிலிருந்து பரிந்துரைகள் பெற்றுக்கொள்வதில் தாமதம ஆகிய கருமங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது.	காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் தாமதமடைவதற்காக காரணங்களை மீளாய்வு செய்து காணிகளை உரித்தாக்கும் அலுவல்களை விரைவுபடுத்துதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் உபபிரிவு 47(4) இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இன் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 16(2) பிரகாரம் இந்த செயலாற்றுகை அறிக்கை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
செயலாற்றுகை தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இணக்க அறிக்கையில் 63 தேவைப்பாடுகளுக்காக இணங்கியிருந்தது என காட்டப்பட்டிருந்தது. அவற்றில் 10 தேவைப்பாடுகளில் தெரிவுப் பரிசோதனையின் போது 05 தேவைப்பாடுகள் இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	பிழையான தகவல்களை உட்படுத்தி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்த தரப்பினருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும், சரியான தகவல்களை உட்படுத்தி அறிக்கைகள் தயாரித்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.4 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்ட செயலகத்தில் சுத்திகரிப்பு சேவையினை நடாத்திச் செல்லும் போது 2006 ஆண்டின் பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 5.2.1(அ) பிரகாரம் விலைகூறல்தாரர் ஒருவருக்கு பதிலளிக்கக்கூடிய விலைகூறல் ஒன்றை தயாரிப்பதற்கு தேவையான அனைத்து தகவல்களும் அடங்காத முறையில் சுத்திகரிப்புப் பண்டங்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நிறுவனத்தின் பங்கிலாபத்தை தனியாக இனங்காண முடியாதவாறு விலைகூறல் அழைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், சுத்திகரிப்பு அலுவல்களுக்கு பயன்படுத்த வேண்டிய மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை எண்ணிக்கை ரீதியாக இனங்காண்பதற்கு முடியாமல் இருந்தது.	கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை குறித்துக்கொண்டதுடன், அடுத்த கூறுவிலைகள் அழைக்கும் போது அவ்வாறான குறைபாடுகளை தவிர்ந்துகொண்டு செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	பெறுகை வழிகாட்டல் கோவையின் குறிப்பிட்ட பிரிவுகளின் பிரகாரம் விலைகூறல்தாரர் ஒருவருக்கு பதலளிக்கக்கூடியவாறு விலைகூறல் ஒன்று தயரிப்பதற்கு இயலுமான முறையில் விலைகூறல் ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	03 பிரதேச செயலகங்களில் 2024 ஆண்டிற்குரிய சுத்திகரிப்பு சேவை பெற்றுக்கொள்ளல் மற்றும் பாதுகாப்புச் சேவை பெற்றுக்கொள்வதற்காக கூறுவிலைகள் அழைக்கும் போது முன்னைய ஆண்டுகள் முதல் கூறுவிலைகள் சமர்ப்பித்திருக்காத நிறுவனங்களுக்கு இந்த ஆண்டின் போது கூறுவிலை அழைத்தல் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்களினால் பதில் கிடைத்திருக்காமையால், கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த ஒன்று அல்லது இரண்டு நிறுவனங்களை மாத்திரம் அடிப்படையகாகக் கொண்டு உச்சமட்ட போட்டி கூறுவிலை அழைக்கப்படாமல் விலைகூறல்தாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தது.	2024 ஆண்டின் போது 306 யோசனைகள் கிடைத்திருந்ததுடன், அதற்காக தொடர்ச்சியான பெறுகை செய்முறை மேற்கொள்வதற்கு எப்போதும் முடியாமல் இருந்தமையால் மாவட்ட பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டது.	உச்ச மட்ட போட்டித் தன்மையுடன் அரசுக்கு அனுகூலமான போட்டி ரீதியான கூறுவிலை கூறுவிலைகள் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	கொங்கிரீட் பண்ணப்பட்ட 05 பாதைகளில் சம்பவப் பதிவேட்டு அறிக்கையின் படி பாதைகள் கொங்கீரிட் பண்ணப்பட்ட திகதி மற்றும் தர அறிக்கையின் படி கொங்கீரிட்களின் மாதிரி பெற்றுக்கொண்ட நாட்களுக்கிடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டமையால் தர அறிக்கையொன்று ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.	லொக் பதிவுப் புத்தகத்தில் சரியாக பதிவு செய்யப்படாமையின் காரணமாக மாதிரிகள் பெற்றுக்கொண்ட திகதிகள் இடையே வித்தியாசங்கள் காணப்பட்டது. எதிர் காலத்தில் இவ்வாறான தாமதங்கள் நடைபெறாமல் இருப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறை வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு முறைகேடுகள் ஏற்படுத்தியிருந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், பாதை தர பரிசோதனையின் பின்னர் தடுத்து வைத்தல் பணம் விடுவிக்கப்பட வேண்டும்.
(ஈ)	எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் காவன்திஸ்ஸ விகாரை மாவத்தை கொங்கீரீட் போடும் போது பாதையின் 19.5 மீற்றர் அளவொன்றுக்கு இரு மறுங்கிலும் வடிகால் சுவர் விழக்கூடிய ஆபத்து நிலையொன்று காணப்பட்ட போதிலும், கொங்கீரீட் பண்ணப்பட்ட காரணத்தினால் அந்தப் பகுதிக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 342,389 இற்கான கிரயத்தையுடைய பாதையின் நீண்ட நாள் நிலைத்திருத்தல் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டது.	இந்த பாதையை பயன்படுத்தும் பொது மக்களின் தீவிர வேண்டுகோள் தொடர்பாக கவனம் செலுத்தி இந்த நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டதுடன், பக்கச் சுவர் எமது நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன், அது முன்னர் நிர்மாணிக்கப்பட்டதொன்றாகும். அதன் காரணமாக இந்த நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டவுடன், அங்கு சிக்கல் தன்மையொன்று காணப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது.	செயற்திட்டமொன்று நிறைவேற்றும் போது செயற்திட்டத்தின் சாத்தியம் மற்றும் பௌதீக சுற்றாடல் தாக்கல் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பக்கச் சுவரின் வலுத் தன்மை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	14 பிரதேச செயலக பிரிவுகளில் 84 அரசாங்க கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.	அனர்த்த அலுவல்களின் போது மற்றும் ஏனைய தற்காலிக அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்காக எதிர்பார்ப்புடன் வைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	குறைபயன்பாட்டுச் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.
(ஆ)	07 பிரதேச செயலகங்களில் காணப்பட்ட டிரக்டர், லொறி மற்றும் பவுசர் உட்பட 07 வாகனங்கள் 04 – 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் விளைவற்று காணப்பட்டது.	மாவட்டத்தில் காணப்படுகின்ற டிரக்டர் மற்றும் நீர் பவுசர் தேவைப்பாட்டை மதிப்பாய்வு செய்து அதன் பின்னர் தொடர்ந்தும் பிரதேச செயலகங்களில் தடுத்து	விளைவற்றுக் காணப்படுகின்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் குறிப்பிட்ட

		வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	வாகனங்களை உரிய நிலையில் தக்க வைத்திருப்பதும், செயற்படுத்துவதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	07 பிரதேச செயலகங்களில் அரசுக்கு உரித்தான காணிகளில் காணப்படுகின்ற 81 கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகங்களின் காணியை நில அளவை செய்து தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கிராம உத்தியோகத்தர் அலுவலகம் அமைந்துள்ள காணிகளை பிரதேச செயலாளரின் பொறுப்பின் கீழ் எடுக்க முடியாமை தொடர்பாக கணக்காய்வு அவதானிப்பு சரியானது என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.	முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட காணிகளை பிரதேச செயலாளரின் பொறுப்பிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	கலவான பிரதேச செயலயத்தின் காணியின் அளவு 01 ஏக்கர் 01 ரூட் 24 பர்சஸ் மற்றும் உதவி பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் அமைந்துள்ள காணியின் அளவு 01 ரூட் 32 பர்சஸ் நிலப் பரப்பொன்றினை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறிப்பிட்ட காணியை அளவை செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. உதவிப் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் அமைந்துள்ள காணி நில அளவை செய்யப்பட்ட போதிலும், இதுவரை அளவை அறிக்கை வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	- மேற்படி -
(உ)	மாவட்ட செயலகத்தின் பஜரோ வண்டி 2021 ஆண்டு முதல் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டு காணப்பட்டதுடன், அதனை திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த வாகனத்தை அப்புறப்படுத்துவதற்காக கொம்ட்ரோலர் ஜெனராலினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.	திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1 பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) இன் பிரகாரம் நிதியாண்டிற்கான பண்டக் கணிப்பீடு அடுத்த நிதியாண்டு மார்ச் 15 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், பலாங்கொடை மற்றும் ஓபநாயக பிரதேச செயலகங்களின் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் கணிப்பீட்டு அலுவல்கள் 2024 ஒப்தோபர் 16 திகதி அளவிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பண்டக் கணிப்பீடு நடாத்தி முடிந்த பின்னர் விரைவாக 2024 ஆண்டிற்குரிய கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களின் பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணம் 756(6) பிரகாரம் செயற்பட்டு பண்டக் கணிப்பீடு மேற்கொண்டு கணிப்பீட்டு சபை அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(எ)	எகலியகொட பிரதேச செயலகத்தின் பண்டப் பதிவேட்டின் படி 445 சொத்து விடயங்கள் காணப்பட்ட போதிலும், ரூபா 110,617,330 பெறுமதியுடைய 82 சொத்து விடயங்கள் மாத்திரம் சிகாஸ் கணினி நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் சொத்துக்கள் மதிப்பீட்டுச் சபையின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு CIGAS மற்றும் பொருட் பதிவேட்டு அறிக்கை சமப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	அனைத்துச் சொத்துக்களையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.6 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப் பிரமாணம் 880 மற்றும் உள்ளக மற்றும் உள்நாட்டு விவகார மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2019 மார்ச் 23 திகதிய 07/2019 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் 09 பிரதேச செயலகங்களில் பிணை வைக்க வேண்டிய 24 உத்தியோகத்தர்களினால் குறிப்பிட்ட பிணைத் தொகை வைப்புச் செய்திருக்காததுடன், நிதிப் பிரமாணம் 881(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வாறு பிணை வைக்கத் தேவையான தனது கீழ் உத்தியோகத்தர்களிடம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் பிணை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிணைத் தொகையை வைப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறைப் பிரகாரம் பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காத பொறுப்பான உத்தியோகத்தருக்கு நடவடிக்கை எடுப்பதற்கு விரைவாக செயற்பட்டு நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணைத் தொகை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	12 பிரதேச செயலகப் பிரிவுகளில், ஓய்வூதியம் பெற்றோருக்கு மிகையாக செலுத்தியிருந்த ஓய்வூதியத்தில் 2024 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 10,006,332 தொகை மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	இந்த ஓய்வுதியம் பெறுவோருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகை மாதாந்த தவணைகளாக ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறவிடப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.	மிகை கொடுப்பனவு தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கு உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டிருந்ததால், முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம்

			செயற்பட்டு மிகைக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	குறைந்த வருமானமுடையவர்களுக்கு இலவசமாக அரிசி வினியோகித்தல் தொடர்பாக 18 பிரதேச செயலகங்களினால் பொதுவாக சந்தை விலையை விட கூடிய விலைக்கு அரிசி கொள்வனவு செய்தமையால் ரூபா 53,848,550 இற்கான நட்டமொன்று அரசுக்கு ஏற்பட்டிருந்தது.	குறைந்த விலைக்கு அரிசி கொள்வனவு செய்வதற்கு முயற்சியெடுத்த போதிலும், போதியளவு அரிசி இருப்பொன்று காணப்படாமை மற்றும் அரிசியின் தரம் தொடர்பாக கவனம் செலுத்தி அரசினால் அரிசி கொள்வனவிற்காக நியம விலையொன்று பரிந்துரைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் அந்த எல்லையை மிகைத்து செயற்படாமல் அரசுக்கு நட்டமொன்று ஏற்படவில்லை என அறிவிக்கின்றேன்.	பெறுகை அலுவல்கள் சிக்கனமாக மற்றும் அரசுக்கு அனுகூலமான முறையில் செயற்படுத்த வேண்டியதுடன், முறையான விசாரணை மேற்கொண்டு அவ்வாறு செயற்படுத்தியிருக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
எகலியகொட பிரதேச செயலகத்தினால் கலுஅந்துர சனசமூக நிலையத்தின் ஓடு வேயப்பட்ட கூரையை மீண்டும் செப்பணிடுவதற்காக ரூபா 500,000 இற்கான ஏற்பாடொன்றின் மீது கூரையின் திருத்த வேலை மேற்கொண்டு அஸ்பஸ்ரோஸ் சீட் பொருத்துவதற்காக குறைவாக மதிப்பீடு தயாரித்த காரணத்தினால் மதிப்பீட்டின் படி சீட் போடுவதற்காக கூரையின் முனையில் 1.5 அடி வெட்டி அகற்றப்பட்டிருந்ததனால் மழைக் காலங்களில் சுவர் நனைவதற்கு காரணமாக இருந்தது.	இந்தக் கூரையின் வெட்டப்பட்ட பகுதியை மீண்டும் விரிவாக்கித் தருவதற்கு ஒப்பந்த சங்கத்தினால் இணங்கியிருந்தமையால், அதற்கான தொழில்நுட்ப அறிவுரை பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டு அதன் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரையின் அடிப்படையில் அதனை மீண்டும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறைப் பிரகாரம் செயற்திட்டங்களை திட்டமிடாத உத்தியோத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு செயற்திட்ட அலுவல்களை ஆக்கபூர்வமாக மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிறந்த கண் காணிப்பின் கீழ் மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.9 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இரத்தினபுரி மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது செயற்படுத்தப்பட்டுள்ள கிராம சக்தி மக்கள் திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்தி, கொள்திறன் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக கிராம சக்தி மக்கள் சங்கங்கள் நிறுவப்பட்டிருந்ததுடன், அதற்காக வழங்கப்பட்டிருந்த நிதியத்திலிருந்து செயற்படாத நிலையில் காணப்பட்ட 132 கிராம சக்தி மக்கள் சங்கங்களினால் பேணப்பட்டு வருகின்ற 132 வங்கிக் கணக்குகளில் ரூபா 30,137,259 தொகை 04 வருடங்களுக்கு நிலையான காலம் முதல் விளைவற்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.	செயற்படாத சங்கங்களின் கணக்குகளில் பணம் மாவட்ட செயலாளரின் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான வேலைத் திட்டமொன்றின் மூலம் விளைவற்றுக் காணப்படும் பணத்தை எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுத்து அரசுக்கு உரித்தாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இம்புல்பே பிரதேச செயலகத்தில் 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது காணி அனுமதிப்பத்தரங்களை பின்னர் சாட்டுவதற்காக விண்ணப்பத்திருந்த 46 நலன் பெறுவோருக்காக 2024 திசெம்பர் 11 திகதி அளவிலும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கியிருக்கவில்லை.	வினியோகிக்கப்பட்டிருக்காத அனுமதிப்பத்திரங்களை பின் சாட்டுவதற்காக குடியேற்ற உத்தியோகத்தரின் அறிக்கையை பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	கால ரீதியாக செயற்திறனுடன் செயற்பட்டிருக்காத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும்.
(இ)	காணி ஆணையாளரின் 96/05 இலக்கம் கொண்ட 1996.08.01 திகதிய சுற்றறிக்கையின் பந்தி 6.11 இன் பிரகாரம் 12 பிரதேச செயலகங்களில் 2024 திசெம்பர் 31 திகதி அளவில் கூட்டுத்தொகை ரூபா 39,053,701 தொகைக்கான நிலுவை நீண்ட கால குத்தகைத் தொகை நாளதுவரையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவைக் குத்தகையை அறவீடு செய்யும் படி கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிலுவை குத்தகைக கால ரீதியாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காத பொறுப்பான தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் நிலுவைக் குத்தகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	05 பிரதேச செயலகங்களில் இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் செயற்படும் சுழல் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் தொகை 10 தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், 01 வருடத்திற்கும் 13 வருடங்களுக்கும் இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 545,364 தொகை நிலுவை கடன் மீதிகள் காணப்பட்டது.	கடன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான மேற்பார்வையுடன் மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு குறிக்கோளை நோக்கி அதனை தொடர்புபடுத்தி கால ரீதியாக தவணைகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்காத தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவைக் கடன் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(உ)	குறைந்த வருமானமுடையவர்களுக்கு இலவசமாக அரிசி வினியோகித்தல் தொடர்பாக 2024 ஏப்ரல் 04 திகதி இலக்கம் சமூகவலுவூட்டல்/01/2024 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 02 இன் பிரகாரம் தெரிவு செய்யப்பட வேண்டும் அறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள நலன் பெறுவோர் அல்லாதோருக்கும் பிரதேச செயலாளரினால் அரிசி வழங்கப்பட வேண்டும் என பரிந்துரைப்பதற்காக இனங்காணப்பட்ட 15,805 நலன்பெறுவோரின் தகவல்கள் 05 பிரதேச செயலகங்களில் காணப்படவில்லை.	இந்த நிகழ்ச்சித் திட்டம் மிகவும் அவசரமான மற்றும் அத்தியவசியமொன்றான கருமமொன்றாக காணப்பட்டமையால் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் தயாரிக்கப்பட்ட நலன்பெறுவோர் பட்டியலின் படி செயற்படுவதற்கு நேரிட்டதெனவும், நலன் பெறுவோர் எண்ணிக்கை கூடிய பெறுயொன்று எடுத்ததெனவும், நலன் பெறுவோர்களின் பெயர் பட்டியல் வெவ்வேறாக தயாரித்து அங்கீகாரம் பெறுவதற்கு போதிய காலமொன்று காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு நலன் பெறுவோரின் தகவல்கள் பேணிச் செல்லாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், முறைகேடுகள் ஏற்பட்டிருந்தால் குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் (XXII) பந்தி 2.8 இன் பிரகாரம் சிற்றுண்டிச்சாலையொன்று (நலனோம்பு சேவை) திணைக்கள உத்தியோகத்தரினால் அல்லது ஒப்பந்த வேலைக்காரர் ஒருவரினால் பேணிச் செல்ல முடியுமாக இருந்த போதிலும், ஒப்பந்த வேலையின் அடிப்படையில் வழங்கப்படின் பெறுகை வழிகாட்டல் கோவையின்	பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 8.9.2 பிரகாரம் ஒப்பந்த வேலைக்காக முறையான உடன்படிக்கையொன்று எழுதி கையொப்பமிடப்பட்டு சிற்றுண்டிச் சாலை பேணிச் செல்லப்படும் காலம் மாதாந்த வாடகை, நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டிய முறை ஆகிய விபரங்கள் அடங்கிய நிபந்தனைகள் உட்படுத்தப்படும்	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் குறிப்பிட்ட பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், சிற்றுண்டிச்சாலைக் கட்டணம் அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், 06 பிரதேச செயலகங்களினால் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளாமல் சிற்றுண்டிச்சாலை வழங்கப்பட்டிருந்ததுடன், 05 பிரதேச செயலகங்களினால் சிற்றுண்டிச்சாலைகளில் இருந்து கிடைக்கக்கூடிய மாதாந்தக் கட்டணம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.	எனவும், அதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	

5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2030 இன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை செயற்படுத்துதல் தொடர்பாக உள்ளகச் சுற்றறிக்கை வெளியிடுதல், செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் அல்லது வழிகாட்டுதலொன்றும் மேற்கொண்டிருக்கவில்லை.	நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயத் திட்டம் தயாரித்தல், நிலைபேறான அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டல்கள் வழங்கப்படாமையால் உள்ளகச் சுற்றறிக்கை வெளியிடுதல் மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	எதிர் பார்த்த இலக்குகளை நெருங்குவதற்காக நிலையேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கும் உள்ளக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

6. நல்லாளுகை

6.1 பொது மக்களுக்கு சேவையாற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கலவான பிரதேச செயலகத்தினால் 04 காணி கொடுப்பனவுப் பத்திரங்கள் சனாதிபதி அவர்களினால் கையொப்பமிடப்பட்டு 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 2024 திசெம்பர் 20 திகதி அளவிலும் குறிப்பிட்ட தரப்பினருக்கு வினியோகித்திருக்கவில்லை. மேலும், பிரதேச செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட 29 அனுமதிப்பத்திரங்கள் 01 வருடத்திற்கும் 04 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், குறிப்பிட்ட தரப்பினருக்கு வினியோகித்திருக்கவில்லை.	முன்னோடி அறிவுரைகளின் மீது கொண்டாட்ட சந்தரப்பத்தில் வினியோகிப்பத்றகாக இந்த நன்கொடைப் பத்திரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், 2024 ஜனவரி முதல் இதுவரை பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டு வருகின்றது. 2025 உள்ளுராட்சித் தேர்தல் முடிவடைந்த பின்னர் மீதியான நன்கொடைப் பத்திரங்கள் வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	ஆவணப்படுத்தல் அலுவல்கள் முடிவடைந்த பின்னர் கொடைப் பத்திரங்கள் விரைவாக வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	எகலியகொட பிரதேச செயலகப் பிரிவிற்கு சனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகங்களிலிருந்து 2024 மே 31 திகதி அளவில் கிடைத்திருந்த 10 பொதுமக்கள் முறைப்பாடுகள், 09 பொது முறைப்பாடுகள் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்த 04 முறைப்பாடுகள் ஆவணப்படுத்தப்படாமல் 2024 ஆகஸ்ட் 05 திகதி அளவிலும் காணப்பட்டதுடன், அந்த பொதுமக்கள் முறைப்பாடுகளுக்களை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	முறைப்பாட்டுப் பரிசோதனை புத்தகத்தில் 1929 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய குறைபாடுகளை 2025 ஆண்டு முதல் சரி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	முறைப் பிரகாரம் முறைப்பாட்டுப் பதிவேடொன்று பேணப்படாத மற்றும் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பொதுமக்களின் சிக்கல்களை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாவட்ட செயலகத்தின் மற்றும் பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் வெற்றிடங்கள் 313 தொகை மற்றும் 481 மிகைகள் அவதானிக்கப்பட்டது.	மிகைகள் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக உரிய நியமன உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது.	பதவியணியை மீளாய்வு செய்து அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவியணியினரை வேறு நிறுவனங்களுக்கு முறைப் பிரகாரம் இணைத்து சமப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.